அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 36 /2017
தேதி: 16.03.2017

## தமிழகத்திற்கு தேவையான வருவாய்க்கும் புதிய முதலீட்டிற்கும் வழிசெய்யாத பட்ஜெட்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

தமிழக அரசு இன்று தாக்கல் செய்த பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் ஏதும் இல்லை.

கடந்த ஆண்டு அறிவித்த அறிவிப்புகளே இந்த பட்ஜெட்டில் தொடர்வதால் புதிய திட்டங்களுக்கும் அறிவிப்புகளுக்கும் வழியில்லை. வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் உறுதியான திட்டங்கள் இல்லை. விவசாயிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் அளவுக்கு அறிவிப்புகளும் இல்லை. அதற்கு மாறாக அரசு மேலும் கடனில் மூழ்கும் விதத்தில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. கடன் சுமையில் இருப்பதாக தெரிவிப்பதைவிட அதனை சரிசெய்வதற்கு ஏற்ப திட்டங்களை வகுக்கவேண்டும்.

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்துக்கு ரூ.250 கோடி நிதி ஒதுக்கியது வரவேற்கத்தக்கது. ஆனால் திட்டமதிப்பீடல் அளவு என்ன, காலவரைமுறை ஆகியவற்றை குறித்த தெளிவு இல்லாதபோது இந்த அறிவிப்பு வெறும் கண்துடைப்பாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

தமிழகம் இது வரை காணாத வறட்சியை சந்தித்திருக்கிறது என்றும் குடிநீருக்கு மிக பெரிய அளவில் பற்றாக்குறை இருக்கப்போகிறதென்றும் நாம் அறிகிறோம். ஆனால் இந்த பிரச்னைகளை தீர்ப்பதற்கு திட்டமிடலும் அணுகுமுறையும் இந்த பட்ஜெட்டில் இல்லாதது ஏமாற்றத்தை தருகிறது.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்